# DEPOSITION OF WITNESS

## In the Court of Judicial Magistrate No.II, Mettur

**Case No : C.C. 712/2024**

**Prosecution witness : ம.சா.1** **Date : 23.09.2025.**

| | |
|---|---|
| **Name : செல்வராஜ்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

1) நான் எந்த வகையான துணி தயார் செய்கிறேன் என்றால் பட்டு மற்றும் பாலிஸ்டர் புடவை நானே தயார் செய்கிறேன். நான் சொந்தமாகவும், வெளியே கொடுத்தும் தயார் செய்கிறேன். நான் சொந்தமாக தறி ஓட்டி வருவதற்கு அரசாங்கத்தில் நிறுவனத்தை பதிவு செய்துள்ளேனா என்றால் GST பெற்றுள்ளேன்.

2) வழக்கில் சொல்லியுள்ள ஜவுளி வியாபாரம் சம்மந்தமாக என்னிடம் யார் பேச்சு வார்த்தை நடத்தினார்கள் என்றால் மோகன்ராஜ் மற்றும் அவர் தம்பி சரவண குமார் ஆகியோரிடம் பேச்சு வார்த்தை நடத்தினேன். இதற்கு முன்னர் எதிரியிடம் வியாபாரம் செய்துள்ளேனா என்றால் இல்லை. ரூ.31,82,550/– என்ற வழக்கில் சொல்லப்பட்ட தொகைக்கு எடுத்த முதல் முறையிலேயே எந்த நம்பிக்கையில் வியாபாரம் செய்தேன் என்றால் முகவர் மூலமாக செய்தேன்.

3) முகவரை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் ஆமாம். எனது வழக்கில் ரூ.31,82,550/– த்திற்கு வட்டியும் சேர்த்து ரூ.4,00,000 தருவதாக எதிரி சொல்லியுள்ளார் என்றால் ஆமாம். நான் வியாபாரத்தில் உள்ள நிலுவை தொகைக்கு அனைவரிடமும் வட்டி பெறுவேனா என்றால் தொடர்ச்சியான வியாபார உறவு வைத்துள்ளவர்களிடம் வட்டி பெறுவதில்லை. எத்தனை புது

பார்ட்டியிடம் வட்டி பெற்றுள்ளேன் என்றால் நான் யாரிடமும் வட்டி பெறவில்லை. யாரிடமும் வட்டி பெறவில்லை என்ற நிலையில் எதிரியிடம் மட்டும் ஏன் வட்டி பெற்றேன் என்றால் எதிரி தான் வட்டி தருவதாக ஒத்துகொண்டதால் தான் வட்டி பெற்றேன்.

4). எதிரி வட்டி தருவதாக ஒத்துகொண்டு ஏதாவது ஆவணம் எழுதி பெற்றேனா என்றால் காசோலை கொடுத்துள்ளார். தனியாக ஆவணம் எழுதி பெறவில்லை என்றால் இல்லை. பில்களில் உள்ள தொகையை சேர்த்து வட்டியுடன் கணக்கிட்டு காசோலை கொடுத்துள்ளார். புது பார்ட்டிக்கு தான் வட்டி வாங்குவது வழக்கம் என்றால் எதிரி தான் முதல் பார்ட்டி ஆகும். ரெகுலர் இல்லாத பார்ட்டிகளிடம் வட்டி வாங்குவது வழக்கம் என்றால் இல்லை.

5). எதிரி என்னிடம் எந்தவிதமான ஜவுளி சரக்கு வாங்கியது இல்லை என்றால் சரியல்ல. நான் வட்டிக்கு பணம் கொடுக்கும் தொழில் செய்வதால் தான் ரெகுலர் இல்லாத பார்ட்டிகளிடம் வட்டி வாங்குவதாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.எதிரி என்னிடம் சரக்கு கேட்டு என்னிடம் ஒப்பந்தம் செய்யபட்டதா என்றால் இல்லை. சேலை பிடித்தவுடன் பெற்றுசெல்வார்கள். மிக அதிகபட்ச தொகையாக சொல்லபட்டுள்ளதால் வியாபாரிகள் என்னிடம் விலை ஒப்பந்த புள்ளி தாக்கல் செய்வார்கள் என்றால் வாய் மொழியாக தான் பேசுவார்கள்.

6). விலை ஒப்பந்த புள்ளி நான் தாக்கல் செய்ததால் எனக்கு எதிரிக்கும் எந்தவிதமான வியாபார தொடர்பு நடைபெறவில்லை என்பது தெரியவருகிறது என்றால் சரியல்ல. ஜவுளி எதிரி பெற்றுகொண்டதற்கான ஒப்புகை ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். எதிரி ஜவுளி சரக்கு வாங்கவில்லை என்பதால் தான் ஒப்புகை ஏதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரி யின் சகோதாரர் சரவணகுமார் என்னிடம் வட்டிக்கு பணம் வாங்கியிருந்தார் என்றால் இல்லை. அதற்காக சரவணகுமார் எதிரியினுடைய காசோலை கையொப்பம் மட்டும் செய்து நிரப்படாத 6 காசோலைகளை கொடுத்திருந்தார் என்றால் இல்லை.

7). காசோலையினை யார் நிரப்பினார்கள் என்றால் எதிரி மற்றும் சரவணகுமார் நிரப்பினார்கள். கையொப்பம் செய்யும் போதே நிரப்பி கொடுத்தார்களா என்றால் நிரப்பி விட்டு தான் கையொப்பம் செய்தார்கள். சரவணகுமார் நிரப்பினார் அதன் பின்னர் எதிரி கையொப்பம் செய்து கொடுத்தார். காசோலையில் உள்ள விபரம் வேறு மையினாலும் கையொப்பம் வேறு மையினாலும் உள்ளது என்றால் ஆமாம். தற்போது பார்த்தால் தெரியவில்லை.

8). எதிரி ரூ.31,82,550/- சரக்கு வாங்கியதாக சொல்லபடும் நிலையில் தற்போது வழக்கு ரூ.10,00,000 கொடுத்துள்ள நிலையில் மீதி தொகைக்கு வேறு தனியாக ஆவணம் ஒப்பந்தம் எழுதபட்டதா என்றால் இல்லை. நான் வட்டி எதன் அடிப்படையில் கணக்கிடபட்டது என்பது குறித்து ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சரவணகுமார் காசோலையினை நிரப்பவில்லை என்றால் சரியல்ல.

9). எதிரி என்னிடம் ஜவுளி சரக்கு எதுவும் வாங்கவில்லை என்றும், எதிரியிடம் துர்லாபம் அடைய வேண்டி எதிரியின் சரவணகுமார் வசம் எனக்குள்ள கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக வட்டி பிரச்சனையில் எதிரியின் சரவணகுமார் கொடுத்த நிரப்பபடாத காசோலையினை பயன்படுத்தி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. வழக்கு சட்டப்படி செல்லதக்கதல்ல என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/- தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.